


**30.08.2024**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. டிஜிட்டல் தொழில்நுட்பம் நாட்டு மக்களின் வாழ்க்கை முறையை எளிதாக்கி உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. வக்ஃப் வாரிய திருத்த மசோதா தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக்குழு கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்று வருகிறது.

3. அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதற்கு உகந்த மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. தமிழ்நாட்டில் அனைத்து சர்வதேச விமான நிலையங்களில் குரங்கம்மை நோய் பரிசோதனைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப் படுவதாக மாநில அமைச்சர் திரு. மா.சுப்ரமணியன் கூறியுள்ளார்

5. பாரீஸில் நடைபெறும் பாராலிம்பிக் போட்டியின் மகளிர் 10 மீட்டர் ஏர் ரைஃபில் பிரிவில் இந்திய வீராங்கனைகள் இன்று களமிறங்குகின்றனர்.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖❖

<u>பிரதமர்</u>

டிஜிட்டல் தொழில்நுட்பம் நாட்டு மக்களின் வாழ்க்கை முறையை எளிதாக்கி உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

மும்பையில் உலகளாவிய ஃபின்டெக் விழாவில் இன்று உரையாற்றிய பிரதமர், டிஜிட்டல் தொழில்நுட்பம் வெளிப்படை தன்மையை உறுதி செய்துள்ளதாகவும் கூறினார்.

நூற்றுக்கணக்கான மத்திய அரசின் திட்டங்கள் நேரடி பண பரிவர்த்தனை மூலமே நடைபெறுவதாக சுட்டிக்காட்டினார்.

உலகளாவிய மின்னனு பரிவர்த்தனைகளில் 50 சதவிகிதம் நம்நாட்டில் மிக விரைவாக நடைபெறுவது குறித்து அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

நிதி சேவைகளை ஃபின்டெக் ஜனநாயகப்படுத்தி இருப்பதாக கூறியஅவர், இதன்மூலம் முறைக்கேடுகள் தவிர்க்கப்பட்டு பயனாளிகள் அரசின் திட்டங்களை உரிய முறையில் பெறமுடிவதாக கூறியுள்ளார்.

இந்த மாபெரும் மாற்றம் மின்னனு தொழில் நுட்பத்தால் மட்டும் ஏற்படவில்லை என்று கூறியுள்ள அவர், இதன் சமூக தாக்கம் பெரிய அளவில் விரிவடைந்திருப்பதாக கூறினார்.

நிதி தொழில்நுட்ப ஸ்டார்ட்அப் நிறுவனங்களும் 500 சதவிகிதம் அதிகரித்துள்ளதாக கூறிய பிரதமர், ஜன்தன் யோஜனா வங்கி கணக்கு திட்டத்தின் கீழ், மக்கள் மிக இலகுவாக வங்கி கணக்குகளை தொடங்கமுடியும் என்றார்.

தொடர்ந்து பிரதமர் பால்கரில் ஆயிரத்து 560 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவதுடன் புதிய திட்டங்களை துவக்கி வைக்கிறார்.

76 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வத்வான் துறைமுகத்திற்கு அடிக்கல் நாட்டுவது உள்ளிட்டவை இதில் அடங்கும்.

❖❖❖❖❖❖❖

<u>வக்.ஃ.ப் வாரிய மசோதா</u>

வக்.ஃ.ப் வாரிய திருத்த மசோதா தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக்குழு கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்று வருகிறது

இந்த மசோதா தொடர்பாக மக்களவை உறுப்பினர் திரு. ஜெகதாம்பிகா பால் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள நடாளுமன்ற கூட்டுக்குழு, பொதுமக்கள், தன்னார்வலர்கள், வல்லுநர்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களின் கருத்துக்களை கேட்டறிகிறது.

மத்திய மற்றும் மாநில வக்.ஃ.ப் வாரியங்களில் இஸ்லாமிய பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யும் வகையில் சட்டத்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, வக்.ஃ.ப் வாரிய தீர்ப்பாய அமைப்பிலும் சொத்துக்கள் நிர்வாகத்தை மேம்படுத்தவும் சீர்த்திருத்தங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த சட்டத்திருத்த மசோதா குறித்த விவரங்கள் மக்களவை இணையதளத்தில் ஆங்கிலத்திலும், ஹிந்தி மொழியிலும் இடம்பெற்றுள்ளன.

பட்ஜெட் கூட்டத்தொடரின் போது மக்களவையில் அறிமுகம் செய்யப்பட்ட மசோதா நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் ஆய்விற்கு பரிந்துரை செய்யப்பட்ட நிலையில் இரண்டாவது முறையாக இக்கூட்டுக்குழுவின் கூட்டம் இன்று நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖

<u>ஜெய்சங்கர்</u>

பாகிஸ்தான் நாட்டுடன் முடிவில்லாத பேச்சுவார்த்தைக்கான காலங்கள் முடிவடைந்து செயல்பாட்டிற்கான பலன்கள் கிடைக்கப் பெறுவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய அவர், பாகிஸ்தானை கையாள்வதில் மிதமான நடவடிக்கைகளை தவிர்த்து உறுதியான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டிருப்பதாக கூறினார்.

ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், மாலத்தீவு உள்ளிட்ட அண்டை நாடுகள் உடனான நட்புறவு குறித்தும் டாக்டர் ஜெய்சங்கர் இந்நிகழ்ச்சியின் போது எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖

<u>ராஜ்நாத் சிங்</u>

நாட்டின் ஆயுதப்படை பிரிவில் மகளிர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

திருவனந்தபுரத்தில் நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய அவர், அனைத்து காவல்துறை மற்றும் துணை ராணுவப் படைகளில் மகளிரின் பங்களிப்பு அதிகரித்து வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖❖

<u>முதலமைச்சர்</u>

அந்நிய முதலீடுகளை ஈர்க்கும் முன்னோடி மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் சான்ஃபிரான்ஸிஸ்கோவில் இன்று நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் உரையாற்றிய அவர், மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை விரைவுப்படுத்துவதற்கான வாய்ப்புகளை இம்மாநாடு ஏற்படுத்தியுள்ளதாக கூறினார்.

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறியஅவர், மனித வளம் மற்றும் திறன்களை முன்வைத்து தமிழகம் வளர்ச்சியடையும் மாநிலமாக திகழ்வதாகவும் குறிப்பிட்டார்.

.. வாய்ஸ் ..

இம்மாநாட்டின் ஒருபகுதியாக உலகின் முன்னணி நிறுவனங்களான நோக்கியா உள்ளிட்ட 6 பெருநிறுவனங்களுடன் 900 கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்க்கும் வகையில் முதலமைச்சர் முன்னிலையில் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்தாயின.

இதன்மூலம் சென்னை, மதுரை, கோவை, செங்கல்பட்டு ஆகிய நகரங்களில் 4 ஆயிரத்து 100 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்க வழிவகை ஏற்படும் என்று கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

**<u>K.R பெரியகருப்பன்</u>**

தமிழ்நாட்டில் கால்நடை விவசாயிகளின் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதாக மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. **K.R.**பெரியகருப்பன் கூறியிருக்கிறார்

சிவகங்கை மாவட்டத்தில் 40 லட்சம் ரூபாய் மதிப்பில் 8 நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தியின் சேவையை இன்று தொடங்கிவைத்து பேசியஅவர், கால்நடைகளுக்கான ஊர்தி சேவை சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதை சுட்டிக்காட்டினார்

முன்னதாக ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டத்தில் விவசாயம் தொடர்பான திட்டங்களின் முன்னேற்றம் குறித்து அமைச்சர் கேட்டறிந்தார்

❖❖❖❖❖❖❖

மா.சுப்ரமணியன்

தமிழ்நாட்டில் அனைத்து அரசு மருத்துவக் கல்லூரிகளிலும் சி.சி.டி.வி. கேமராக்கள் பொருத்தப்பட்டு மாணவிகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

கோவை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், குரங்கம்மை நோய் தொடர்பாக அனைத்து சர்வதேச விமான நிலையங்களில் தொடர்ந்து சோதனை நடைபெற்று வருவதாக கூறினார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

அப்பாவு

தமிழ்நாட்டில் உழவு, நடுகை, அறுவடை உள்ளிட்ட பணிகள் வேளாண் உபகரணங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சட்டப்பேரவைத் தலைவர் திரு. அப்பாவு தெரிவித்துள்ளார்.

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டையில் நவீன வேளாண் இயந்திரங்களை கையாள்வது குறித்த பயிற்சி முகாமை இன்று துவக்கி வைத்து பேசியஅவர், வேளாண் பணிகளுக்கு ஆள் பற்றாக்குறை ஏற்பட்டதால் வேளாண் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖

ராமதாஸ்

பொங்கல் பண்டிகைக்கு வழங்கப்படும் இலவச வேட்டி சேலை திட்டத்தின் கீழ் மூன்றில் ஒருபங்கு கைத்தறி நெசவாளர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட வேண்டும் என்று பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் வேட்டி சேலைகளை விசைத்தறி நெசவாளர்களிடமிருந்து முழுமையாக கொள்முதல் செய்யும் முடிவை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖

## TNPSC

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகளுக்கான தேர்வுக்கு இன்றுமுதல் அடுத்தமாதம் 28-ம் தேதி விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

105 தொழில்நுட்ப பணியிடங்களுக்கு நவம்பர் 18, 19, 20 ஆகிய தேதிகளில், தேர்வு நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖

பிரதீப்குமார்

திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேளாண்மை பொறியியல் துறை சார்பில் வேளாண் இயந்திரங்கள் பராமரிப்பு குறித்த முகாமை ஆட்சித் தலைவர் திரு. மா. பிரதீப்குமார் இன்று துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்த முகாமில் பங்கேற்றுள்ள விவசாயிகள் வேளாண் இயந்திரங்களை வாடகை அடிப்படையில் பயன்படுத்திக் கொள்ளலாம் என கூறினார்.

திருவாரூர் மாவட்டத்தில் நடைபெற்ற இம்முகாமை ஆட்சித்தலைவர் திருமதி. சாருஸ்ரீ பார்வையிட்டார்.

❖❖❖❖❖❖❖

சிவகங்கை:

சிவகங்கை மாவட்டம் இலுப்பக்குடியில், இந்தோ திபெத் எல்லை பாதுகாப்பு படையின் 488வது பயிற்சி நிறைவு விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பேசிய, பாதுகாப்பு படையின் தலைவர் நிர்பால் சிங், ஆயிரத்து 84 பேர் கடினமான சூழல்களை எதிர்கொள்ளும் வகையில் உரிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

மேலும், 18 ஆயிரம் அடி உயரத்தில் மைனஸ் 45 டிகிரியிலும், பணியாற்றுவதற்கான சிறப்பு பயிற்சி வழங்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

□□□□□□□

விருதுநகர்

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டையில் நடைபெறும் 3-ம் கட்ட அகழாய்வு பணியல் சங்கு வளையல் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

□□□□□□□

இருவரி

திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, நாகை, புதுக்கோட்டை மாவட்டங்களில் மகளிருக்கான தனியார்த்துறை வேலைவாய்ப்பு முகாம் 2-வது நாளாக இன்றும் நடைபெறுகிறது

நாமக்கல் மாவட்டத்தில் திருக்குறள் முற்றோதல் போட்டிக்கு பள்ளி மாணாக்கரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக ஆட்சித் தலைவர் டாக்டர் உமா தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் பாதுகாப்பு படை ஓய்வூதியதாரர்களுக்கான குறைதீர்நாள் முகாம் இன்று நடைபெற்றது.

தென் மாவட்டங்கள் மற்றும் தென் தமிழகத்தை ஒட்டிய கேரள மாநில பகுதிகளை சேர்ந்த 500-க்கும் அதிகமான ஓய்வூதியதாரர்களின் குறைகளுக்கு இதில் தீர்வு காணப்பட்டது

தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம் ஆட்சித்தலைவர் பிரியங்கா பங்கஜம் தலைமையில் இன்று நடைபெற்றது.

இதில் பங்கேற்ற விவசாயிகள் கடைமடை பகுதிவரை தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்தனர்.

தர்மபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் எய்ட்ஸ் நோய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியை ஆட்சித்தலைவர் திருமதி. சாந்தி இன்று தொடங்கிவைத்தார்

தென்காசி மாவட்டத்தில் சுதந்திர போராட்ட வீரர் பூலித்தேவனின் 309-வது பிறந்த நாள் வரும் ஒன்றாம் தேதி கொண்டாடப்படுகிறது

இதையொட்டி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாவட்டம் முழுவதும் இன்றுமாலை 6 மணிமுதல் வரும் 2-ம் தேதி வரை 144 தடை உத்தரவு அமலில் இருக்கும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கமல் கிஷோர் கூறியுள்ளார்.

□□□□□□□

<u>வானிலை</u>

வங்க கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி அடுத்த 36 மணி நேரத்தில் மேற்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது வடக்கு ஆந்திரா, தெற்கு ஒரிசா கடற்கரை நோக்கி நகரக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், திருநெல்வேலி மாவட்டங்களின் மலைப்பகுதிகள், நீலகிரி, ஈரோடு, சேலம், தர்மபுரி, கிரு‘ணகிரி, திருப்பத்தூர், தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களிலும் இன்று கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக இம்மையம் கூறியுள்ளது.

மன்னார் வளைகுடா, தென்தமிழக கடலோர பகுதிகள் மற்றும் அதனையொட்டிய குமரிக்கடல் பகுதிகளில் மணிக்கு 35 முதல் 45 கிலோமீட்டர் வேகத்தில் சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் இப்பகுதிகளுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

□□□□□□□

<u>பாராலிம்பிக்</u>

பாரீஸில் நடைபெறும் பாராலிம்பிக் போட்டியின் மகளிர் 10 மீட்டர் ஏர் ரை.:.பில் பிரிவில் அவனிலெஹாரா, மோனா அகர்வால் உள்ளிட்டோர் இன்று களமிறங்குகின்றனர்.

ஈட்டி எறிதல், 100 மீட்டர் பந்தயம், குண்டு எறிதல் போட்டிகளிலும் இந்திய வீர வீராங்கனைகள் இன்று போட்டியிடுகின்றனர்.

□□□□□□□

<u>பேட்மிட்டன்</u>

இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் காலிறுதியில் இந்தியாவின் சமீர்வர்மா - ஜப்பானின் ரிக்கு ஹட்டானேவை இன்று எதிர்கொள்கிறார்.